***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 360/2019 – P.W. 12 (LW11)***

| | |
|---|---|
| *Name* | ராமச்சந்திரன்<br>தனியார் மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *45* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது சொந்தமாக தனியார் மருத்துவமனை வைத்துள்ளேன்.

கடந்த 10.09.2019 ம் தேதியன்று நான் மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது சுமார் 64 வயது மதிக்கதக்க சௌரிராஜன் என்பவர் உடலில் பிரேத பரிசோதனை செய்ய 03.15 மணிக்கு மன்னார்குடி நகர காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின் படி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். நான் மதியம் 03.20 மணியளவில் பிரேத பரிசோதனையை தொடங்கினேன். அவரது உடல் முழுவதும் விறைப்பு தன்மை இருந்தது. அவரது உடலில் இருந்த வெளிப்புற காயங்கள்

1. இரண்டு மார்பு பகுதியிலும் சிதைந்த காயங்கள் இருந்தன. வயிற்று பகுதி மற்றும் மார்பில் டயர் படிந்த தடம் இருந்தது. வலது தொடை பகுதியில் சிதைந்த காயம் இருந்தது.

உட்புற பகுதி காயங்கள்

1. நாவடி எலும்பு சாதாரணமாக இருந்தது. வலது பக்க மண்டை எலும்பு நொறுங்கி மூளையின் உட்புறத்தில் இரத்த கசிவு இருந்தது. பலதரப்பட்ட விலா எலும்புகள்

நொறுங்கி நுரையீரலை சுற்ற இரத்த கசிவு இருந்தது. சிதைந்த கிழிந்த காயங்கள் இதயம், நுரையீரல், கல்லீரல், வயிறு ஆகியவற்றில் இருந்தது. வயிற்றின் உட்புறத்தில் இரத்த கசிவு இருந்தது. தண்டுவடம் சாதாரணமாக இருந்தது. பிரேத பரிசோதனையை 04.45 மணிக்கு முடித்தேன். இறப்பு நேரம் பிரேத பரிசோதனைக்கு முன் 6 மணி நேரத்திற்கு முன்பாக இருக்கலாம்.

இறப்பிற்கான காரணம் உடலின் முக்கிய உறுப்புகளான மூளை, இதயம், நுரையீரல் பாதிப்படைந்ததால் அவர் இறந்திருக்கிறார் என்று கருத்துரை வழங்கி பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். **மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.